சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 10.11.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-2 |
| சாட்சியின் பெயர் | : | சாந்தி |
| கணவர் பெயர் | : | குமார் |
| கிராமம் | : | திருத்துறைப்பூண்டி |
| தாலுக்கா | : | திருத்துறைப்பூண்டி |
| தொழில் | : | கூலி வேலை |
| வயது | : | 45 |

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் சமூகத்தை சேர்ந்தவள் ஆவேன். அ.சா-1 எனது கணவர் ஆவார்.

ஆஜர் எதிரியை தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு 2 பெண் குழந்தைகள் இருந்தனர். முதல் பெண் நந்தினி அவர் B.Sc நர்சிங் படித்துள்ளார். சென்னையில் வேலை செய்து வருகிறார். எனது 2 வது மகன் பெயர் நந்துதாஷினி ஆவார். அவர் லேப் டெக்னிசியன் படித்துள்ளார். எனது 2 வது மகளான நந்துதாஷினி கடந்த 19.03.2025 ஆம் தேதி அன்று திருத்துறைப்பூண்டியில் உள்ள எனது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்துக்கொண்டார். நான் அந்த சமயத்தில் மருத்துமனைக்கு வைத்தியம் பார்க்க சென்றிருந்தேன். அப்போது பகல் 12.30 மணியளவில் எனது மூத்த மகள் எனக்கு போன் மூலம் தகவல் சொன்னதன் பேரில் தான் நான் வீட்டிற்கு சென்றேன். ஆனால் அங்கு எனது மகளின் பிரேதம் இல்லை. முதலில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துமனைக்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள். அவர் இறந்த பின்னர் 2 வது மகள் நந்துதாஷினி சூரியா என்பவருடன் நெருக்கமான உறவில் இருந்து வந்துள்ளார் என்றும், அதன் மூலம் கருவுற்றிருந்தாகவும், என்னிடம் எனது பெரிய மகள் சென்னையில் இருந்து எனக்கு போன்மூலம் தகவல் சொன்னார். அவர் என்னிடம் சொல்லும்போது சூரியா என்பவர் தனக்கு போன் செய்து உமது தங்கை தூக்கில் தொங்குகிறார் என்றும் போய் அள்ளிக்கொள்ளுங்கள் என்றும் சொன்னதாக என் மகள் எனக்கு தகவல் சொன்னார். நான் அப்போது மருத்துவமனையில் இருந்ததால் நான் செல்லும் வழியிலேயே திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக கூறினார்கள். நான் சென்று பார்க்கும் போது என் கணவரும் அங்கு வந்துவிட்டார். எனது பெரிய மகள் நந்தினி என்னிடம் எனது இளைய மகள் நந்துதாஷினி சூரியா என்பவர் மூலம் கருவுற்றிருந்ததாகவும், சூரியாவிற்கும் எனது இளைய மகள் நந்துதாஷினிக்கும் போன் மூலம் ஒருவருக்கொருவர் சண்டை பேட்டுக்கொண்டதாகவும், பின்னர் இளைய மகளிடம் நான் என்ன சாதி நீ என்ன சாதி என்று சூரியா சொன்னதாகவும், மேலும் திருமணம் செய்து கொள்ள முடியாது என்று சொன்னதாகவும்,

என்னிடம் மூத்த மகள் நந்தினி தெரிவித்தார். மேலும் எனது இளைய மகள் செல்போனில் சூரியா என்பவரும் எனது இளைய மகளும் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோக்கள் இருந்ததாகவும் சொன்னார். இது சம்மந்தமாக எனது கணவர் திருத்துறைப்பூண்டி காவல் நிலையத்தில் புகார் அளிக்க சென்றார். இது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் நான் எனக்கு தெரிந்த விவரத்தை கூறியுள்ளேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M
Digitally signed by VADIVEL M
Date: 2025.11.10 17:08:37 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.